12.08.2024 அ.வ. எண்.412/2019 வா.சா.3 உதயகுமார்

குறுக்கு விசாரணை

நான் 1ம் வாதி தமிழரசியின் மகன். சாட்சி பணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறி பிறகு சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறார். 1ம் வாதியின் தகப்பனார் பெயர் கோபால். கோபால் இறந்தபோது அவருக்கு சொத்துக்கள் இருந்தது. கோபால் இறந்தபிறகு அவர்களின் வாரிசுகள் கோபால் சொத்துக்களை இன்னமும் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. கோபால் சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை, தனியாக பணம் கொடுத்து வாங்கியதால் சேர்க்கவில்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின்படி பாதிக்கப்படுகிறது என்றால் தவறு. கோபால் சொத்துக்களில் 1ம் பிரதிவாதியின் கணவர் தமிழ்மணிக்கும் பங்கு உண்டு. தமிழ்மணியின் பங்கை ஏமாற்றுவதற்காக தான் வழக்கில் கோபால் சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் இராணுவத்தில் 45 ஆண்டுகள் பணிபுரிந்தார் என்றால் தோராயமாக தான் சொல்கிறேன். 1ம் பிரதிவாதியின் கணவர் வடஇந்தியாவில் தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான், விடுமுறையின்போது வந்து செல்வார். 1ம் பிரதிவாதியின் கணவர் இராணுவத்தில் பணிபுரிந்து வருவதால் அவர் குடும்பத்தின் கர்த்தாவாக இருந்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் 1ம் பிரதிவாதியின் கணவர் குடும்பத்தின் கர்த்தாவாக இருந்துவந்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவரின் கட்டுப்பாட்டில் வாதிகள் இருந்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் வாதி ரூ.2,00,000/-மும், 2ம் வாதி ரூ.1,00,000/-மும், 1ம் பிரதிவாதி ரூ.3,00,000/-மும் கொடுத்து கிரயம் வாங்கியதாக சொல்வது தவறு

என்றால் சரியல்ல. வாதிகள் பணம் கொடுத்து கிரயம் வாங்கியிருந்தால் ஆதாரம் தாக்கல் செய்திருப்போம் என்றும், பணம் கொடுக்காத காரணத்தினால் தான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சொத்தை கொடுத்தவரிடம் பணம் கொடுத்துவிட்டோம். பணம் கொடுக்காத காரணத்தினால் தான் கிரய ஆவணத்தில் வாதிகள் பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் நம்பிக்கையின் பேரில் 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்டது. 1ம் பிரதிவாதி தான் மொத்த பணத்தையும் கொடுத்து தாவா சொத்தை கிரயம் வாங்கினார் என்றும், அதனால் தான் எந்த ஆதாரமும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரயம் பெற்ற காலத்தில் 1ம் வாதி வெளியூரில் இருந்தார் என்பதற்கும், 2ம் வாதி டிரைவராக வேறு இடத்தில் இருந்தார் என்பதற்கும் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் மேற்சொன்ன சங்கதி வழக்கிற்காக சொல்லப்படும் சங்கதி என்று சொன்னால் சரியல்ல. தமிழ்மணியின் அறிவுறுத்தலின் பெயரில் 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை, வாய்மொழியாக சொன்னது தான். 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து கிரயம் வாங்கப்பட்டதால் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு தான் சொந்தமானது என்றும், அதில் வாதிகளுக்கு பாகம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, நாங்களும் கிரயத்திற்கு பணம் கொடுத்துள்ளதால் பாகம் உள்ளது. தாவா சொத்தில் செங்கல் சூளை நடத்துவதற்கு அரசாங்கத்தில் உரிமத்தை 1ம் பிரதிவாதி தான் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க 1ம் பிரதிவாதி தான் செலவுசெய்தார் என்றும், 1ம் பிரதிவாதி பெயரில் தான் மின் இணைப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல, செலவு நாங்கள் தான் செய்தோம். வாதிகள் செலவு செய்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், செலவு செய்ததாக சொல்வதே தவறு

என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் செங்கல் சூளை நடத்த உரிமம் பெற்றிருந்தார் என்றும், 1ம் பிரதிவாதியின் கீழ் 2, 3 வாதிகள் வேலை செய்துவந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதால் 1ம் பிரதிவாதியின் கணவருக்கே தாவா சொத்தில் உரிமையில்லை என்று சொன்னால் பணம் கொடுத்ததால் தான் கேட்கிறோம். 1ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான தாவா சொத்தை 2 முதல் 6 பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளதால் தாவா சொத்தில் இருந்த மண்ணை சமன்செய்துள்ளார்கள் என்று சொன்னால் அவர்கள் அராஜகமாக மண்ணை கலைத்துவிட்டார்கள். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு மட்டும் சொந்தமானது என்பதால் 1ம் பிரதிவாதி 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரயம் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் நாங்கள் பணம் கொடுத்ததால் தான் கேட்கிறோம். 1ம் பிரதிவாதி 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை விற்பனை செய்து சுவாதீனம் ஒப்படைத்துவிட்டதால் தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் எங்களுக்கு தெரியாமல் விற்றுள்ளார். பெண்கள் சொத்துரிமை சட்டத்தின்படி பெண்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவர்களுக்கு மட்டுமே பாத்தியம் என்றும், அதில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதால் வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளதால் மின் கட்டணத்தை 1ம் பிரதிவாதி தான் செலுத்திவந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டு 1ம் பிரதிவாதி 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு

விற்பனை செய்தபிறகு தாவா சொத்திற்கான பட்டா 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்று சொன்னால் எங்களுக்கு தெரியாமல் விற்றுவிட்டார். தாவா சொத்திற்கான அ பதிவேடு 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் எங்களுக்கு தெரியாமல் சொத்தை விற்பனை செய்துவிட்டதால் அவர்கள் பெயரில் உள்ளது. 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டதால் 1ம் பிரதிவாதியின் கணவர் குடும்பத்தின் கர்த்தாவாக இருந்ததாக வழக்கிற்காக தவறாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.